செ.வெ.எண்:11 நாள்:04.02.2020

**தூத்துக்குடி மில்லர்புரம் புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பல்நோக்கு சமூக சேவை சங்கம் சார்பில், உலக புற்று நோய் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

---

தூத்துக்குடி மில்லர்புரம் புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பல்நோக்கு சமூக சேவை சங்கம் சார்பில், எழுவோம் இயக்கம் நிகழ்ச்சி இன்று (04.02.2020) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு உலக புற்று நோய் தின விழாவினை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, பள்ளி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

புற்று நோய் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், உலக புற்று நோய் தினம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இது ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது. புற்றுநோய் என்பது பல்வேறு தரப்பு மக்களை தாக்கும் பொதுவான நோயாக உள்ளது. புற்றுநோய் தகுந்த காலத்தில் அறிந்து மருத்துவ சிகிச்சைகள் மேற்கொண்டால் இதின் பாதிப்புகளை தவிர்க்கலாம். இந்த நோய் வருவதை தவிர்க்க எந்த மாதிரியான உணவு பொருட்களை மேற்கொள்ள வேண்டும். என்பதை அறிந்து கொள்ள வேண்டும். புரோட்டா உள்ளிட்ட துரித உணவுகளை (Fast Food) உட்கொள்ள கூடாது. உடற்பயிற்சி அவசியம் மேற்கொள்ள வேண்டும். உடலுக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்க வேண்டும். புதிது புதிதாக பல்வேறு நோய்களும் வருகிறது. தற்போது கொரொனா வைரஸ் நோய் பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது. நமது மாவட்டத்தில் மற்றும் மாநிலத்திலும் இதன் தாக்கம் இல்லை எனினும் இது குறித்த விழிப்புணர்வை நாம் அறிந்து கொள்ள வேண்டும். கைகளை அடிக்கடி கழுவுதல் வேண்டும். கை கழுவாமல் உணவு அருந்தக் கூடாது. சுகாதார பழக்கவழக்கங்களை நாம் கண்டிப்பாக கடைபிடித்து வந்தால் வைரஸ் தாக்குதலை தவிர்க்க முடியும். பள்ளி, கல்லூரிகளிலும், புற்றுநோய் மற்றும் வைரஸ் பரவுதல் குறித்து முன்னெச்சரிக்கை வழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்ட பொது மக்களும் விழிப்புணர்வு கருத்துக்களை தெரிந்து கொண்டு நமது மாவட்டத்தில் புற்றுநோய் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என பேசினார்.

இவ்விழாவில், தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உறைவிட மருத்துவர் மரு.சைலஸ் ஜெபமணி, உதவி உறைவிட மருத்துவர் மரு.இன்சுவை, இயக்குநர், நெல்லை புற்றுநோய் பராமரிப்பு மையம் மரு.சிந்தியா, பல்நோக்கு சமூக சேவை சங்கம் சகோ. பெஞ்சமின் டி சோசா, தூத்துக்குடி மறைமாவட்டம் சகோ. ரோலிங்டன், மில்லர்புரம் புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தாளாளர் சகோ. ஜோசப், தலைமையாசிரியர் சகோ.மரிய ஜோசப் ஆண்டனி மற்றும் மருத்துவ அலுவலர்கள், பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.